# DEPOSITION OF WITNESS

(ORDER XVIII RULE 4 OF C.P.C)

## IN THE COURT OF DICTRICT MUNSIF, THIRUVAIYARU

| | | |
|---|---|---|
| Case No. | : | O.S. No. 91/2025 |
| Deposition of | : | PW2 |

| | | |
|---|---|---|
| Name | : | ராஜாங்கம் |
| Father’s Name | : | பெரியசாமி |
| Village | : | மேலத்திருப்பூந்துருத்தி |
| Tahsil | : | திருவையாறு |
| Calling | : | விவசாய கூலி |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24$^{rd}$ day of March 2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 3 ஆம் நபராவேன். வாதி தரப்பு 2 வது சாட்சி. எனது முதல்விசாரணை சாட்சி வாக்குமூலத்தை சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள பொருண்மைகள் எனக்கு நன்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் வாதி எனக்கு என்ன உறவு என்றால் தம்பி உறவு ஆகும். ராமையன் எப்போது எங்கு இறந்துபோனார் என்று தெரியுமா என்றால் 20 வருடத்திற்கு முன்பு வீட்டில் இறந்துபோனார். ராமையன் மனைவி எப்போது இறந்துபோனார் என்றால் 15 வருடங்களுக்கு முன்பு இறந்தார். ராமையா–மங்கலம் தம்பதியினருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் இல்லை. இறந்துபோன ராமையன் வாதி கஜேந்திரனுக்கு என்ன உறவு என்றால் பெரியப்பா ஆவார். ராமையாவின் மனைவி வாதி கஜேந்திரனுக்கு என்ன உறவு என்றால் பெரியம்மா ஆவார். இறந்துபோன மங்கலம் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் உடன் பிறந்தவர்கள் எவரும் இல்லை. ராமையா–மங்கலம் ஆகியோரது இறுதி சடங்கில் நான் கலந்து கொண்டேனா என்றால் ஆமாம். வாதி கஜேந்திரன் எனக்கு உறவுக்காரர் என்பதால் அவர்

கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/Ramalingam

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.24 17:41:58 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU